**கொவிட் 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் மற்றும் கொவிட் 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் - 2022**

---

கொவிட் 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் மற்றும் கொவிட் 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியளிப்பின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 2020 ஏப்ரல் 02 ஆம் திகதிய பிரேடி 3852 ஆம் இலக்க உலக வங்கி அறிக்கையின் 52 ஆம் பிரிவு மற்றும் 2021 ஏப்ரல் 22 ஆம் திகதிய பிரேடி 4442 ஆம் இலக்க உலக வங்கி அறிக்கையின் 71 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ அலகு (பிஎம்யூ) அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. கொவிட்-19 ஆல் திணிக்கப்படும் அச்சுறுத்தலைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் பதிலளித்தல் மற்றும் இலங்கையில் பொது சுகாதாரத் தயார்நிலைக்கான தேசிய முறைமைகளை வலுப்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 41,717.45 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 209.11 மில்லியனானதுடன் அதில் ரூபா 12,271.25 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 61.51 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 29,446.20 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 147.60 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 ஏப்ரல் 04 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியின் 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் - 19 நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக கட்டிடங்களின் நிர்மாணம் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக இலங்கை தரைப்படை செயற்திட்டத்தின் சார்பாக செலவிடப்பட்டிருந்தது, எனினும் இந்த நிர்மாணங்கள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடுகள் அல்லது பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் கொள்வனவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 859 | இந்த உபகரணங்கள் மற்றும் நிர்மாணப் பொருட்கள் இலங்கை தரைப்படையின் சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதென இலங்கை தரைப்படை எழுத்துமூலம் அறிவித்தது. | சான்றாதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 139(4) | ஒவ்வொரு கொடுப்பனவிற்கும் முறையான பெறுவனவுச் சிட்டையை பெற்றுக்கொள்வதற்கு பணம் செலுத்தும் உத்தியோகத்தர் பொறுப்பாக உள்ள போதிலும் கொவிட் காலப்பகுதியில் சுகாதார பணியாளர்களை ஏற்றிச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 45 மில்லியன் தொகைக்கு முறையான பற்றுச்சீட்டுக்கள் பெறப்பட்டிருக்காதமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | அந்தந்த டிப்போவில் இருந்து அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையெழுத்துடன் கடிதம் பெறப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 262 (2) | பணம் செலுத்திய அனைத்து உறுதிச்சீட்டுக்கள் மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் "செலுத்தப்பட்டது" என முத்திரையிடப்பட வேண்டும். | இணங்கப்பட்டது. நிதிப்பிரமாண இல. 262 (2) உடன் இணங்குவதற்கு நடவடிக்கைகள் | நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலும் காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட கொடுப்பனவு திகதியும் முத்திரையிடப்பட வேண்டும். எனினும், செயற்திட்டத்தினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் மேற்படி பிரிவின் பிரகாரம் முத்திரையிடப்பட்டிருக்காதமை மாதிரி கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்படும். | |
| (இ) | நிதிப்பிரமாணம் 267(II) | ஒரு ஊழியரின் சம்பளம் அல்லது ஊதியம் பங்களிப்பாளருக்கே செலுத்தப்பட்டுள்ளதுடன் அவரது கையொப்பம் தொடர்புடைய சம்பளத் தாள் அல்லது சம்பளப் பட்டியலில் பதிவு செய்யப்பட வேண்டும், எனினும் மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 15 மில்லியன் தொகையான சம்பளம் தொடர்பாக இந்த ஏற்பாடுகள் பின்பற்றப்படவில்லை. | தனி சம்பளப் பட்டியல் பேணப்பட்டதுடன் இதனை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியும். | நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 371 (2) (ஆ) | உபகட்டுநிதியானது அதற்கு ஒதுக்கப்பட்ட வேலை பூர்த்தியடைந்ததும் உடனடியாகத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும், எனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 20 தடவைகள் வழங்கப்பட்ட ரூபா 2 மில்லியன் பெறுமதியான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த முற்பணங்கள் கொவிட் 19 தொற்றுநோய் பரவியதன் காரணமாக, தனிப்பட்ட தொடர்புகள் தடைசெய்யப்பட்ட நாட்டின் அவசரகால சூழ்நிலையில் வழங்கப்பட்டது என்பதை தயவுசெய்து குறித்துக் கொள்ளவும். | நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |
| (உ) | நிதிப்பிரமாணம் 396 | ரூபா 45,000 தொகையான 02 காலாவதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. நிதிப்பிரமாண இல. 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஊ) | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2019 யூலை 09 ஆம் திகதிய ஜீஐஆர்/2019/39/ | சம்பந்தப்பட்ட வழங்குநர் வற் பதிவு செய்யப்பட்ட நபரா என்பதையும் வற் செலுத்துவதற்கு முனனர் அவரது வற் பதிவு இலக்கம் செயற்படு நிலையில் உள்ளதா என்பதையும் | வழங்குநர்களான பியூச்சர் ஓட்டோமொபைல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், சுரேன் குக் ஏஜென்சிஸ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் அபான்ஸ் | தொடர்புடைய சுற்றறிக்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சீஜஎன்எஸ்ஏ (II) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | உறுதிப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் குறித்த ஏற்பாடுகளிற்கு இணங்காமல் 9 சந்தர்ப்பங்களில் ரூபா 175 மில்லியன் கூட்டுமொத்தம் வழங்குநர்களிற்கு செலுத்தப்பட்டுள்ளது. | பிஎல்எஸ் ஆகியவற்றின் பதிவு எண்ணைச் சரிபார்த்துள்ளோம். வற் பதிவு உறுதிப்படுத்தல் கடிதங்கள் இணைக்கப்பட்டுள்ளன (03). விலைப்பட்டியல் திகதிகளின் போது ஏனைய நிறுவனங்கள் செயற்படு நிலையில் உள்ளமை சரிபார்க்கப்படுகின்றன. | |
| (எ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டம் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது குழு கூட்டம் எந்தவொரு காலத்திலும் நடாத்தப்பட்டிருக்காதமையை கணக்காய்வு வெளிப்படுத்தியது. | அவதானிப்புடன் இணங்கப்பட்டது, 2022.10.19 இல் செயற்திட்ட வழிநடாத்தல் குழு நியமிக்கப்பட்டு, 2022 நவம்பரில் நடாத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது தவிர்க்க முடியாததால் நடாத்தப்படவில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும். |
| (ஏ) | சுகாதார அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) ஆகியவற்றுடன் 2020 மே 20 இல் கைச்சாத்திடப்பட்ட அசல் உடன்படிக்கை மற்றும் 2021 மே 31 இல் கையொப்பமிடப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் | செயற்திட்டம் ஐ.அ.டொலர் 35.24 மில்லியன் அதிகபட்ச வரம்பிற்குள் மருத்துவ உபகரணங்களை வழங்கும். அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் மூன்று முறை ஐ.அ.டொலர் 30 மில்லியனிற்கு சமமான ரூபா 5,550 மில்லியன் மற்றும் ரூபா 533 மில்லியனுக்கு சமமான ஐ..அ.டொலர் 2.66 மில்லியன் திரட்டப்பட்டு ரூபா 6,083 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 32.64 மில்லியன் முன்பணமாக செலுத்தப்பட்டது. 2021 திசெம்பர் 16 இல் UNICEF சமர்ப்பித்த இறுதிக் கணக்கின் பிரகாரம் கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமை தயார்நிலை செயற்திட்டம் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக UNICEF இற்கு ஐ.அ.டொலர் 32.64 மில்லியன் தொகையை செலுத்தியது. ரூபா 740 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.03 மில்லியன் மிகுதி தொகையை | UNICEF இடமிருந்து ஐ.அ.டொலர் 2,038,315.68 ஐத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் ஏற்கனவே எடுத்துள்ளோம். உலக வங்கியின் சேவைநாடுநர் இணைப்பு முறை மூலம் தீர்ப்பனவுகளை மேற்கொள்வதற்கு உலக வங்கியுடன் ஆலோசனை செய்து, பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான விண்ணப்பம் ஏற்கனவே UNICEF இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>பணத்தைத் திரும்பப் பெறுவது தொடர்பான மீதமுள்ள நடவடிக்கைகள் உலக வங்கி மற்றும் UNICEF இன் ஒரு பகுதியாகும், மேலும் அவர்கள் | உடன்படிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | |
|---|---|
| இதுவரை பெற முடியவில்லை. மேற்படி முற்பணங்கள் செலவினங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டன. | பணியை விரைவில் பூர்த்தி செய்வார்கள் என நம்புகிறோம். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமை தயார்படுத்தல் செயற்திட்டம், உரிய திகதிகளில் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியக் கொடுப்பனவிற்காக பதிவு செய்யாததால், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 44,000 மேலதிக கட்டணம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். கணக்காய்வின் போது இது ஒரு பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. கொவிட் - 19 அவசரகால சூழ்நிலையின் கீழ் கொவிட் - 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளுக்கான தயார்படுத்தல் செயற்திட்டமாக 2020.05.06 இல் இந்த செயற்திட்டம் நிறுவப்பட்டது. ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பதிவு தொற்றுநோய் காலத்தில் நாட்டில் நிலவும் சூழ்நிலையின் கீழ் 2021.11.17 வரை தாமதமாகியது. | நட்டத்தை பொறுப்பானவர்களிடம் இருந்து அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டில் அரச மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளுக்கான சார்பு (pro-forma) விலைப்பட்டியல் அடிப்படையில், ரூபா 7,660 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், மருந்து விநியோக கட்டளைகளின் பிரகாரம் சில மருந்துகள் 2023 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்தன, அதன் பிரகாரம் வணிக விலைப்பட்டியல் மற்றும் GRN கொடுப்பனவின் சிறிது காலத்திற்குப் பின்னர் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | குறித்த பெறுகை பொறிமுறையானது நாட்டின் அவசரகால சூழ்நிலையின் கீழ் பெறுகை தொடர்பாக வழங்கப்பட்ட நிதியேற்பாட்டினை அடிப்படையாக கொண்டது என்பதை தயவுசெய்து குறித்துக் கொள்ளவும். அரச மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம் வழங்கிய தெளிவுபடுத்தல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | அசல் ஆவணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |